# திருவனந்தபுரம் - ஆழ்வார்கள் அநுபவம்

(மலை நாட்டு திவ்யதேசம்)



ஆசிரியர்

ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்

நன்றி:

1 ) ஸ்ரீ ஸ்ரீனிவாசன் நாராயணன் - தமிழ், ஸம்ஸ்க்ருத, ஆங்கில தட்டச்சு மற்றும் எழுத்துப் பிழை திருத்தல் உதவி

2 ) ஸ்ரீவீரவல்லி வினோத் (www.anudinam.org) மற்றும் ஸ்ரீ முகுந்தன் ஸ்ரீநிவாசன் - படங்கள் உதவி

3 ) சௌ ஸ்வேதா சுந்தரம் - eBook தொகுப்பு உதவி

## உள்ளடக்கம்

ஆசிரியர் முன்னுரை ----- பக்கம் 3

திருவனந்தபுரம் ( ஆழ்வார் பாசுரங்களின் வைபவம்) ----- பக்கம் 4 முதல் 21 வரை



ஸ்ரீ:

# திருவனந்தபுரம் - ஆழ்வார்கள் அநுபவம்

( மலை நாட்டு திவ்ய தேசம்)

******

## *நூலாசிரியர் முன்னுரை*

****

அன்புள்ள ஆஸ்திக அன்பர்களுக்கு,

அடியேனின் தாஸஸ்ய விஞ்ஞாபனம்.

முன்பு IBM என்கிற ஸ்தாபனத்தில் உத்யோகத்திலிருந்த போது 1992 செப்டம்பர் தொடங்கி மார்ச் 1993 வரை வேலை நிமித்தமாக பல வெளிநாடுகளுக்கு ப்ரயாணம் செய்து கொண்டிருந்த வேளையில் பகவத் சிந்தனை விடாமலிருக்க 108 திவ்ய தேசங்கலைப் பற்றியும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பற்றியும், வேத வேதாந்தங்களைப் பற்றியும் ஏற்பட்ட எண்ணங்களின் கருத்துக்கோவைகளை ஒரு நூல் வடிவமாக எழுதியது நேற்று நடந்தது போல் பசுமையாக நினைவில் நிற்கிறது.

பகவத் பாகவத ஆசார்ய கடாக்ஷங்களினால் இப்பொழுது அந்நூலிலிருந்து ஒரு பகுதியாக மலையாள நாட்டு திவ்ய தேசமான திருவனந்தபுர திவ்ய தேசத்தப் பற்றிய ஆழ்வார் ஆசார்யர்களின் மங்களாசாஸங்களை குறித்து எழுதிய விவரங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

||ஆழ்வார் எம்பெருமானார் ஆசார்யர் திருவடிகளே சரணம்||

தாஸன்

ஒப்பிலியப்பன் கோவில் வரதாசாரி சடகோபன்



ஸ்ரீ:

# திருவனந்தபுரம் - ஆழ்வார்கள் அனுபவம்

(மலைநாட்டு திவ்யதேசம்)

*ஆசிரியர்: ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்*

( Editor-in-Chief of eBooks at www.sadagopan.org )

*****

## மலைநாட்டு திருப்பதிகள்:

மலையாள தேசத்தில் பின் வரும் 13 திருப்பதிகள் உள்ளன:

(1) திருவனந்தபுரம் (2) திருவண்பரிசாரம் (3) திருக்காட்கரை (4) திருமூழிக்களம் (5) திருப்புலியூர் (குட்டநாடு) (6) திருச்செங்கனூர் - திருச்சிற்றாறு (7) திருநாவாய் (8) திருவல்லவாழ் (9) திருவாட்டாறு (10) திருவித்துவகோடு (11) திருக்கடித்தானம் (12) திருவாறன்விளை (13) திருவண்வண்டூர்.

இந்த திருப்பதிகள் திருவனந்தபுரம், எர்ணாகுளம், கோட்டயம், குருவாயூர், நாகர்கோயில், ஸமீபம் உள்ளன. முதலாவதாக நாம் திருவனந்தபுரத் திருப்பதியை ஸேவித்துக் கொள்வோம்.

## திருவனந்தபுரம்

இங்கு அனந்தபத்மநாபன் ப்ரஹ்மாண்டமான திருமேனியுடன் ஹேமகூட விமான நிழலில் ஸ்ரீஹரிலக்ஷ்மி தாயாருடன் ஸேவை தருகிறான். இந்த கர்ப்பக்ருஹத்திற்கு மூன்று வாயில்கள் உள்ளன. இடது புறம், பகவானின் க்ரீடமும், திருமுக மண்டலமும் ஸேவை ஆகிறது. மத்தியில், நாபியில் உள்ள கமலத்தில், ப்ரஹ்மாவின் ஸேவை ஆகிறது. வலது புறத்தில் திருவடி ஸேவை கிடைக்கிறது. முன் காலத்தில், திருவாங்கூர் ஸமஸ்தானம் பூராவும் கோயிலின் சொத்தாக இருந்தது. இந்த ஸமஸ்தானத்தை ஆண்ட அரசர்களுக்கு பத்மநாப தாஸன் என்ற பெயர் அதனால் ஏற்பட்டது. நம்மாழ்வார்

“அந்தமில் புகழ் அனந்தபுர நாதனை” தனது திருவாய்மொழியின் பத்தாம் பத்தில் 11 பாசுரங்கள் மூலம் அன்புடன் பாடிப் போற்றினார். அவர் பின் வந்த ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், “பன்னக சயனா” என்ற மத்யமாவதி கீர்த்தனத்தை அருளியுள்ளார். இந்த க்ருதியின் வாக்யங்கள் பின் வருமாறு:

**பல்லவி:**

பன்னக சயன பத்மநாப பரிபாலயமாம் பங்கஜநாப

**அனுபல்லவி:**

உந்நதபாண்ட்ய கேரள நிவாஸ, ஸ்ரீநிவாஸ சிதாநந்த விலாஸ

**சரணம்:**

பாயஸாந்ந ப்ரியகர ஸ்ரீகர பரசுராம க்ஷேத்ர ப்ரபாகர

பரமபக்த ப்ரஹ்லாதாதி விநுத ப்ரஸித்த குருகுஹ ஹிதோபகார

மாயாதீத மந்தரகிரி தரகர த்ருத சங்கசக்ர கதாதிதர

தோயஜாஸநாதி ஸம்ஸேவித தாமோதர தயாகர வரத கர

பத்மநாபா! அரவணைத் துயில்வானே! கேரள-பாண்ட்ய தேசத்தில் விளங்கும் பங்கஜநாபா! லக்ஷ்மி தேவியை உனது திருமார்பில் அமர்த்திக் கொண்டிருப்பவரே! ப்ரஹ்லாதன் போன்ற பரம பக்தர்களுக்கு உதவியவரே! ஸச்சிதானந்த ஸ்வரூபரே! பாயஸ நைவைத்யத்தில் ருசி கொண்டவரே! பரசுராம க்ஷேத்ரத்தை ஒளி படுத்தும் கதிரவனே! மந்தர பர்வதத்தை கூர்மாவதாரத்தின் போது தூக்கிப் பாற்கடலில் நிலைபடச் செய்தவரே! ஸுதர்சன, பாஞ்சஜன்ய, கௌமேதக ஆயுதங்களை கரங்களில் தரித்திருப்பவரே! ப்ரஹ்ம்மா முதலான விண்ணோர்கள் வணங்கும் தாமோதரனே! தயாபரனே! என்னை நீ ரக்ஷிக்க வேண்டும் என ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், இத்தலத்தில் பாடினார்.

ஸ்ரீ பத்மநாப தாஸன் என்ற குலப் பெயர் பூண்ட திருவாங்கூர் மஹாராஜாவான ஸ்வாதி திருநாள், ஸ்ரீ பத்மநாபன் மேல் ஏராளமான கீர்த்தனங்களை பல ராகங்களிலும், பல பாஷைகளிலும் செய்தருளியுள்ளார். இப் புவியில் 34 ஆண்டுகளே வாழ்ந்த ஸ்ரீ ஸ்வாதி திருநாள் செய்திருக்கும் கீர்த்தனங்களின் உயர்வை சாதாரணமாக அறிந்து

கொள்ளமுடியாது. "கர்ப்ப ஸ்ரீமானான" ஸ்வாதி திருநாளுக்கு ஜாயமான கடாக்ஷம் என்ற பகவத் கடாக்ஷம் கர்ப்பத்திலிருக்கும் போது ஏற்பட்டது.

பத்மநாப தாஸன் என்ற பரம்பரை பெயர் கொண்ட ஸ்வாதி திருநாள், தனது ஆராதன தெய்வமான பத்மநாபன் அருகில் இருக்க வேண்டியதால், தனது தலைநகரை கொல்லத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு மாற்றினார். மைஸூர் மஹாராஜா தினமும் சாமுண்டேஸ்வரியை ஸேவிக்க கோயில் சென்றது போல், ஸ்வாதி திருநாளும் தனது யஜமானனான ஸ்ரீ பத்மநாபனின் ஸேவைக்காக, தினமும் அவன் கோயிலை அடைந்து, தண்டனிட்டு, ஆசீர்வாதம் பெற்று திரும்பி வெற்றியுடன் அரசாண்டார்.

பகவானுடைய பேராயிரங்களை உயரிய ஸம்ஸ்க்ருதத்திலும், மனமோஹனமான மலையாளத்திலும், சுந்தரத் தெலுங்கிலும், கொஞ்சும் கன்னடத்திலும், பக்திக்கே பிறந்த மராத்தியிலும், ஹ்ருதயத்தை தொடும் ஹிந்துஸ்தானி பாஷையிலும் போற்றி பாடினார். தேவ தேவனான பத்மநாபனை எல்லாவற்றிலும், எல்லா காலங்களிலும் அரசர் கண்டு பாடிப் புகழ்ந்தார். அழகிய ரக்தி ராகங்களிலும், அபூர்வமான ரேவகுப்தி, லலித பஞ்சமம், கோபிகா வஸந்தம் போன்ற ராகங்களிலும் ஸ்ரீ பத்மநாபனின் கல்யாண குணங்களைப் பாடி மகிழ்ந்தார்.

ஸ்ரீ பத்மநாபனை "दशवर्षसहस्राणि दशवर्षशतानि च தசவர்ஷஸஹஸ்ராணி தசவர்ஷசதானி ச" என்றபடி 11,000 வருஷங்கள் அயோத்தியில் "ராமராஜ்யம்" என்ற நாட்டை அரசாண்ட ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியாக ஸேவித்துக் கொண்டு, "பாவயாமி ரகுராமம்" என்ற ஸாவேரி ராக கீர்த்தனையால் மஹாராஜா நமஸ்கரித்தார். ஸம்பூர்ண ராமாயணமாக அமைந்த இந்த கிருதியை ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீனிவாஸ ஐய்யர் பின்னர் ஸாவேரி, நாட்ட குறிஞ்சி, தன்யாஸி, மோஹனம், முகாரி, பூர்வி கல்யாணி, மத்யமாவதி, என்ற ஏழு ராகங்கள் கொண்ட ஸப்த காண்ட ராக மாலிகையாக மாற்றினார்.

கீழே தந்துள்ள YouTube தொடர்பை 'க்ளிக்' செய்தால் பாரத் ரத்னா ஸ்ரீமதி M.S.சுப்புலக்ஷ்மி அவர்களின் இனிமையன குரலில் "பாவயாமி ரகுராமம்" க்ருதியை

கேட்டு மகிழலாம்.

http://m.youtube.com/?reload=7&rdm=10dvl21ai#/watch?v=kH _ EVmIL3LE



ஸ்ரீ அநந்தபத்மநாப ஸ்வாமி - திருவனந்தபுரம்

மலையாளமும், ஸம்ஸ்க்ருதமும் கலந்த மணிப்ரவாள பாஷையில், 42 ச்லோகங்கள் கொண்ட உத்ஸவ ப்ரபந்தம் என்ற க்ருதிகளை, ஸ்ரீ பத்மநாபனின் உத்ஸவ தினங்களில் பாடுவதற்காக ஸ்வாதி திருநாள் அமைத்தார். உத்ஸவத்தின் த்வஜாரோஹணம், "பங்கஜநாபோத்ஸவம்" என்ற மோஹன ராக க்ருதியுடன் ஆரம்பமாகிறது. முதல் நாள் உத்ஸவத்திற்காக "பஞ்சஸாயகாஜநகன்" என்ற நீலாம்பரி ராக க்ருதியை அமைத்தார். இரண்டாவது தினத்திலிருந்து, பத்தாவது தினத் தேர் விழாவிற்கு பின் உள்ள கொடி இறக்க தினம் வரையில் பாடுவதற்காக, ஒவ்வொரு தினத்திலும், ஒவ்வொரு க்ருதியை அமைத்தார். இந்த க்ருதிகளும், அவைகளுடன்

கலந்த ராகங்களும் பின் வருமாறு:

| தினம் | கிருதி | ராகம் |
|---|---|---|
| இரண்டாவது தினம் | பங்கஜாக்ஷணம் | தோடி |
| மூன்றாவது தினம் | கனகமய | ஹுசேனி |
| நான்காவது தினம் | ஆந்தோளி காவாஹனே | ஆனந்த பைரவி |
| ஐந்தாவது தினம் | ஸ்யானாந்துரேசன் | குறஞ்சி |
| ஆறாவது தினம் | இந்த்ரபதி | நவரோஜ் |
| ஏழாவது தினம் | சிபிகையில் | மங்கள் கைசிகி |
| எட்டாவது தினம் | நிலாப்புரி | யதுகுல காம்போஜி |
| ஒன்பதாவது தினம் | சுரதிந்து | காம்போஜி |
| பத்தாவது தினம் | நாகஸ்யானம் | பந்துவராளி |
| மங்கள கிருதி / முடிவு | ஸரஸிநாபநின் | ஸௌராஷ்ட்ரம் |

ஸ்ரீ பத்மநாபனைப் பற்றி பல கிருதிகள் அருளிய ஸ்வாதி திருநாள் "பத்மநாப சதகம்" என்ற க்ரந்தத்தை நமக்களித்தார். இந்த க்ரந்தத்தில், ஸ்ரீமந் நாராயணனின் தசாவதாரங்களைப் பற்றியும், பகவானிடம் நாம் பக்தி செலுத்த வேண்டுவதின் அவச்யம் பற்றியும் விளக்கியியுள்ளார். ஒரு "பக்த மஞ்சரி" என்ற அழகிய காவ்யத்தையும், ஸ்வாதி திருநாள் நமக்கருளியுள்ளார். இந்த க்ரந்த காவ்யத்தில், ஸ்ரீமந் நாராயணனிடம் செலுத்தப்பட வேண்டிய ஒன்பது வகை பக்தி மார்க்கங்களான ஸ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாத ஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சக்யம், ஆத்ம நிவேதனம் ஆகியவைகளை நமக்கு விளக்கியுள்ளார். உயரிய ஸம்ஸ்க்ருத பாஷையில், இந்த க்ரந்தங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

ஸ்வாதி திருநாளின் வம்ஸாவளியில் வந்த அஸ்வதி திருநாள் என்ற பட்டப்பெயரைக் கொண்டுள்ள ஸ்ரீ ராம வர்மா அவர்கள் பாடிய 'பன்னகேந்திர சயனா' க்ருதியை கீழெ தரப்பட்டுள்ள YouTube link-குகளை 'க்ளிக்' செயவதின் மூலம் கேட்டு மகிழவும்.

பன்னகேந்திர சயனா – (1ம் பாகம்)

https://www.youtube.com/watch?v=Kx2Nu3KIUC0

பன்னகேந்திர சயனா – (2ம் பாகம்)

https://www.youtube.com/watch?v=rwXlFnr7DEw



திருவனந்தபுர உத்ஸவம் – (நன்றி: www.pbase.com )

திருவனந்தபுரக் கோயில் உத்ஸவங்கள் பற்றி "ச்யாநந்தூர பூர்வ வர்ணனா ப்ரபந்தம்" என்ற சம்பு க்ரந்தத்தில், செய்யுள் (poetry ), உரை நடை (prose ) இரண்டையும் கலந்து, செய்யுள் லக்ஷணங்களையும் விளக்கிய விதமாக அருளியுள்ளர். தனது வாழ் நாள் காலமாகிய 34 வருஷங்களுக்குள், இத்தனை ப்ரஹ்ம்மாண்டமான நூல்களையும், க்ருதிகளையும் அருளியது மாத்திரமல்லாது, பத்மநாபன் என்ற பெயருகேற்ப, பத்மநாபனின் ராஜதானியையும் அவன் சேவகனாக ஸ்வாதி திருநாள் அரசாண்டார். செய்கைகள் எல்லாவற்றிலும், நினைப்புகள் எல்லாவற்றிலும், எப்போதும் ஸ்ரீ பத்மநாபனையே தன் வாழ்க்கையின் லக்ஷ்யமாக ஏற்று, இப்புவியை புனிதப் படுத்திய தெய்வீக அருள் பெற்ற ஸ்வாதி திருநாளின் புண்ய சரிதத்தை நாமும் அறிந்து வணங்க வேண்டும்.

இனி திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாபனைக் கொண்டாட நம்மாழ்வார் அருளிய பதினொரு பாசுரங்களை பற்றி பார்ப்போம். திருவாய்மொழி முடிவடையும் சமயம், நம்மாழ்வார் நம்மிடம் கொண்ட கருணையால், நாம் உய்யும் வழியை ஆசார்ய ஸ்தானம் வஹித்து அருளினார். இப்பாசுரங்கள், திருவாய்மொழியின் பத்தாம் பத்து, இரண்டாம் திருமொழியாக நமக்கு, கிடைத்துள்ளன. நாம் உய்வதற்கான சுலப மார்க்கத்தை இந்த பாசுரங்கள் மூலம் விளக்கியுள்ளார். ஸமுத்ரமும், சோலைகளும் சூழ்ந்த திரு அனந்தபுரம் இன்றே போய் சேருங்கள்! நாளைக்கு போவோம் என்று தள்ளிப் போடாது, உடனே அங்கு போய் சேர்ந்து, கையில் "நல்ல புனலொடு மலர்கள்" எடுத்து, பத்மநாபனின் ஸன்னதியை அடையுங்கள். அவனை தர்ஸித்து, கேசவா, நாராயணா என்று கூவி அழையுங்கள். பத்மநாபன் என்ற அவன் திருநாமத்தையும் கூசம் இல்லாது பேசுமின். அந்த திவ்யநாமம் மோக்ஷம் அளிக்கக்கூடிய "திண்ண நாமம்". நான் சொல்வதை கேளுங்கள். அங்கு போய் சேருங்கள். "நமர்களே! சொல்லக் கேண்மின், நாமும் போய் நணுக வேணும்". அப்படி செய்தீர்களானால்,

கெடும் இடராயவெல்லாம் ....,நாளும் கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுககில்லார், ..... ஏதம் சாரா .... தீரும் நோய் வினைகளெல்லாம் திண்ண நாமறியச் சொன்னோம் .... எண்ணுமினெந்தை நாமம் இப்பிறப்பறுக்கும்...

என்று நம்மாழ்வார், திருவனந்தபுரத்தானை அணுகி ஸேவிப்பதால் ஏற்படும் மங்களங்களை குறிப்பிட்டார். உங்கள் கொடுவினைகள் ஒழியும், யமதூதர்கள் உங்களை அணுக மாட்டார்கள். அவனுடைய தர்சனமும், நாம ஸங்கீர்த்தனமும் உங்களை ஸம்ஸார துக்கங்களிலிருந்து விடுவித்து, மோக்ஷ ஸாம்ராஜ்யம் அடையச் செய்யும் என்று நமது பூர்வாசார்யர் சொன்னார்.

நான் இந்த பூமியில் இருக்கப் போகும் காலம் சுருங்கி வருகிறது. என் நாதனை சேருங்காலம் நெருங்கி வருகிறது. அதனால்,

நாமும் உமக்கறியச் சொன்ன நாள்களும் நணியவான,
சேமநன் குடைத்துக் கண்டீர் செறிபொழிலனந்தபுரம்,
தூய நல் விரை மலர்கள் துவளற ஆய்ந்துகொண்டு,
வாமனடிக் கென்றேத்த மாய்ந்தறும் வினைகள் தாமே

என்று நான் சொல்வதை அனுஸரித்து, திருவனந்தபுரம் பத்மநாபனுக்கு தொண்டு செய்து, பிழைத்து விடுங்கள் என்று ஆழ்வார் சொன்னார்.

" மாதவா" என்று அவன் முன் சொல்லி, சந்தனம், விளக்கு, சாம்பிராணி, தாமரை மலர்கள் எடுத்து அவனுடைய ஆராதனத்தில் ஈடுபட்டு, வினைகள் ஒழிந்து, பேரும், புகழும் நீங்கள் அடைந்து மார்க தர்சியாக மாறுங்கள் எனப் பின் வருமாறு நியமித்தார்:

மாய்ந்தறும் வினைகள் தாமே மாதவா என்ன, நாளும்
ஏய்ந்த பொன் மதிளனந்தபுரநகரெந்தைக் கென்று,
சாந்தொடு விளக்கம் தூபம் தாமரை மலர்கள் நல்ல,
ஆய்ந்து கொண்டேத்தவல்லார் அந்தமில் புகழினாரே.

" கொந்தலர் பொழில் குருகூர் மாறன் சொல்லாயிரத்துள்" பத்து பாசுரங்களில், நம்மாழ்வார், நம்மை திருவனந்தபுரம் சென்று, பத்மநாபனின் செந்தாமரைப் பாதங்களை தர்சித்து, நீங்கள் எல்லாம் நித்ய ஸூரிகள் ஆகி, ஸ்ரீவைகுண்டத்தில் வசித்து, அவனுக்கு

தொண்டு புரியும் அருள் பெறுவீர்களாக வேணும் எனப் பின் வருமாறு உபதேசித்தார்:

படமுடையரவில் பள்ளி பயின்றவன் பாதம் காண,
நடமினோ நமர்களுள்ளீர் நாமும் உமக்கறியச் சொன்னொம்,
..... .... ..... .... .... .... .... ...
திண்ணம் நாமறியச் சொன்னோம் செறிபொழில் அனந்தபுரத்து,
அண்ணலார் கமலபாதமணுகுவார் அமரர் ஆவர்.



திருவனந்தபுரம் ஸ்ரீ அநந்தபத்மநாபஸ்வாமி

இப்போது ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவனந்தபுர பாசுரங்களை சற்று விரிவாக பார்ப்போம்:

இப்பாசுரங்கள், பத்தாம் பத்தில், இரண்டாம் திருவாய் மொழியாக அமைந்துள்ளன. திருவாய்மொழி முடியும் சமயம் இது. ஆழ்வார்க்கு வைகுந்தம் ஏறி பரமபத நாதனை சேவித்து, நித்ய கைங்கர்யங்கள் செய்ய த்வரை. பகவானுக்கும், ஆழ்வாரை வரவேற்க அவசரம்.

இந்த பரமபத யாத்திரையை ஆரம்பிப்பதற்கு முன், "புகுந்த வீடு

போகப்பிறப்படும் பெண், பழகிய உறவினர், தோழியர் வீடுகளில் புக்கு விடை பெருமாப்போலே", சில உகந்தருளின நிலங்களை ஆழ்வார் பாடுகிறார். இவை அனேகமாக முன்னர் பாடப்பட்ட திவ்ய தேசங்கள் அல்ல. தொலை தூர பிரயாணம் செய்ய இருக்கும் தமக்கு, வழித்துணையாக திருமோகூர் க்ஷேத்ரநாதனை, பத்தாம் பத்து, முதல் திருமொழியில் அன்புடன் முதலாவதாக அழைத்தார். அடுத்ததாக, திருவனந்தபுரத்து ஆதியை சேவிக்க வேணும் என்ற ஒரு ஆசை உந்த, பரமபத யாத்திரைக்கு முன் ஸ்வல்பமான கைங்கர்யங்கள் செய்தாலும் பெரிய பலன்களை அனுக்ரஹிக்கும் அய்யனை மங்களாசாசனம் செய்கிறார்.

பாசுரம் 1:

கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்ன, நாளும்
கொடுவினைசெய்யும் கூற்றின்தமர்களும் குறுககில்லார்
விடமுடையரவில் பள்ளி விரும்பினான் சுரம்பலற்றும்
தடைமுடயவயலனந்தபுரநகர்ப்புகுதி மின்றே

( கருத்து): கேசவா என்ற கிருஷ்ணனின் திருநாமம் ஒன்றை சொல்லுங்கள். அதை உச்சரித்த மாத்திரத்திலே, கொடிய வினைகள் எல்லாம் அழிந்து போய் விடும். இடரெல்லாம் கெடும். கேசவ நாமத்தின் அர்த்தங்கள் தெரிய வேண்டிய நிர்பந்தம் இல்லை. கேசவ நாமத்தை சொன்னதும், தினம் தினம் க்ரூரமான தொழில்கள் செய்யும் யமனின் சேவகர்கள் உங்கள் அருகில் கூட வர மாட்டார்கள். விஷ்ணு பக்தர்களான உங்களிடம் அணுகக்கூடாது என்ற யம தர்மராஜனின் கட்டளைக்கு உட்பட்டு, அவர்கள் தள்ளியே செல்வார்கள். பூக்கள் நிறைந்த தடாகங்களை உடைய திருவனந்தபுரத்து பெருமானை சேவிக்க இன்றே நாம் போவோம்.

பாசுரம் 2

இன்று போய்ப்புகுதிராகில் எழுமையுமேதம் சாரா
குன்று நேர் மாடம் மாடே குருந்து சேர் செருந்திபுன்னை
மன்றலர் பொழிலனந்தபுரநகர் மாயன் நாமம்
ஒன்றுமோராயிரமாம் உள்ளுவார்க்கும்பரூரே

( கருத்து): இப்படி, உங்களுக்கு ஸேவா ருசி ஏற்பட்டிருக்கும் போது, கால தாமதம் செய்யாது, உடனே அனந்தபுரத்து அண்ணலின் தலத்திற்கு செல்லுங்கள். மலையை ஒத்த மாளிகைகளும், அவைகளின் அருகில் பல சோலைகளும் அங்கு காண்பீர்கள். அவைகளில், குருந்த மரங்கள், செருந்தி மரங்கள், புன்னை மரங்கள் நறு மணம் கொண்ட புஷ்பங்களுடன் செழித்திருக்கும். இந்த திருவனந்தபுர திவ்ய தேசத்தில், எம்பெருமானின் திருநாமம் ஸ்ரீ அனந்தபத்மநாபன். அப்பனின் ஆயிரம் நாமங்களில் ஒன்றை ஜபித்தாலும், அது ஆயிரம் நாமங்கள் ஸேவித்த பலனை கொடுக்கும். அந்த ஒரு நாமமே ஆயிரம் வகைகளாக நம்மை ரக்ஷிக்கும். இந்த தத்துவம் அறிந்தோர்க்கு, அவனது திவ்ய தேசமே பரம பதமாம்.

பாசுரம் 3

ஊரும்புட்கொடியுமஃதே ; உலகெல்லாமுண்டுமிழ்ந்தான்
சேரும் தண் அனந்தபுரம் சிக்கெனப்புகுதீராகில்,
தீரும் நோய் வினைகள் எல்லாம் திண்ணம்; நாம் அறியச்சொன்னோம்
பெரும் ஓர் ஆயிரத்துள் ஒன்று நீர் பேசுமினே

( கருத்து): அனந்தபுர நாதன், கருடனை வாஹனமாக கொண்டுள்ளான். அவனுடைய விஜய த்வஜமும் கருடனே ! ப்ரளைய காலத்தில், எல்லா உலகங்களையும் விழுங்கி, மீண்டும் உமிழ்ந்தவனுமான அவனுடைய திருத்தலத்தை விரைவில் அடைவீராகில், உடனே எல்லா நோய்களும், அவைகளுக்கு ஆதாரமான வினைகள் ஆகியவை உடனே ஓடிவிடும். இது உண்மை, இதை நாம் அறிந்தவகையில் சொன்னோம். அவனது ஒப்பிலா ஆயிரம் திருநாமங்களில் ஒன்றையாவது சொல்லி அனுபவியுங்கள் என்கிறார்.

பாசுரம் 4:

பேசுமின் கூசமின்றிப் பெரிய நீர்வேலைசூழ்ந்து
வாசமே கமழும் சோலை வயலணியனந்தபுரம்
நேசம் செய்துறைகின்றானை நெறிமையால் மலர்கள் தூவி
பூசனை செய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறே




ஸ்ரீ அனந்தபத்மநாபஸ்வாமி கருட ஸேவை - (நன்றி: www.anudinam.org)

( கருத்து): பரிமள கந்தமுடைய புஷ்பச்சோலைகள், தாமரை மலரும் வயல்களும் சூழ்ந்த திருவனந்தபுரத்தில், நம்மிடம் அன்பு பூண்டு நித்ய வாசம் செய்யும் ஸ்ரீ அனந்தபத்மநாபனை சாஸ்திர முறைப்படி மலர்கள் தூவி, அவன் பக்தர்கள் ஆராதனம் செய்கிறார்கள். இந்த பாக்யசாலிகள் என்ன தவம் செய்துள்ளார்கள் என்பதை சங்கோஜப்படாமல், மற்றவர்களுக்கு எடுத்து சொல்லி மகிழுங்கள் !

பாசுரம் 5

புண்ணியம் செய்து, நல்ல புனலோடு மலர்கள் தூவி
எண்ணுமின் எந்தை நாமம் ; இப்பிறப்பு அறுக்கும்; அப்பால்
திண்ணம் நாம் அறியச்சொன்னோம் செறி பொழில் அனந்தபுரத்து
அண்ணலார் கமல பாதம் அணுகுவார் அமரர் ஆவார்

( கருத்து): பக்தியுடன் நீர் (தண்ணீர்) சுமந்து, மலர்களையும் கொண்டு வந்து அனந்தபுரத்து ஆதியை ஆராதியோங்கள் ! அவனுடைய திருநாமங்களை நினையுங்கள். அந்த நினைவு பிறப்பு-இறப்பினை அழிக்கும். சோலைகளும், வாவிகளும் நிறைந்த திருவனந்தபுரத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் பாத கமலங்களை அடைபவர்கள் நித்ய சூரிகளாய் திகழ்வர். இந்த விஷயத்தை நகரமும் நாடுமறிய நாம் உறுதியிட்டு சொன்னோம் என்கிறார்.

பாசுரம் 6

அமரராய் திரிகின்றார்கட்கு ஆதிசேர் அனந்தபுரத்து
அமரர்கோனர்ச்சிக்கின்று அங்கு அகப்பணிசெய்வர் விண்ணோர்
நமர்களோ சொல்லக்கேண்மின் நாமும் போய் நணுக வேண்டும்
குமரனார் தாதை துன்பம் துடைத்தகோவிந்தனாரே

( கருத்து): மனிதர்களே! நம்முடையவர்களே! உங்களிடம் அன்புடன் சொல்லுகிறேன்! கேளுங்கள்! ஸுப்ரமண்யனுக்கு தந்தையான சிவனாரின் துன்பத்தை நீக்கினவர் கோவிந்தனாவார். அவர் தேவர்களாக திரிபவர்களுக்கு எல்லாம் காரணபூதர். அவர் கோயில் கொண்டுள்ள திருவனந்தபுரத்தை நித்ய சூரிகளின் தலைவனான

விஷ்வக்சேனர் ஆராதனம் செய்கிறார். அங்கு பலர் அனந்தபத்மநாபனுக்கு அத்தாணி சேவகம் புரிகிறார்கள். அன்பர்களே! பணி புரிய நாமும் போய்ச்சேர வேண்டும்.



ஸ்ரீ அனந்தபத்மநாப ஸ்வாமி – மூலவர், உத்ஸவர் (நன்றி: www.anudinam.org )

பாசுரம் 7

துடைத்த கோவிந்தனாரே, உலகு, உயிர், தேவும், மற்றும்
படைத்த எம் பரம மூர்த்தி பாம்பு அணை பள்ளிகொண்டான்
மடைத்தலை வாளை பாயும் வயல் அணி அனந்தபுரம்
கடைத்தலை சீய்க்கப்பெற்றால், கடுவினை களையலாமே

( கருத்து): கல்பாந்த காலத்தில் எல்லாவற்றையும் அழிக்கும் கோவிந்தனாரே அதன் பின் உலகெல்லாம் படைக்கும் பரம மூர்த்தியாவன். அவரே அனந்தபுரத்தில் ஆதிசேஷன் மேல் பள்ளிகொண்டுள்ளார். வாய்க்கால்களில்

வாளை மீன்கள் துள்ளிக்குதித்து, வயல்களை அடையும், அணிமாடங்களை உடைய அழகிய அனந்தபுரத்து திருவீதிகளை திருஅலகிட்டு சுத்தம் செய்வதால், நமது கொடிய வினைகளை எல்லாம் போக்கலாம் என்கிறார்.

பாசுரம் 8

கடுவினை களையலாகும், காமனைப்பயந்த காளை
இடவகை கொண்டது என்பர் எழில் அணி அனந்தபுரம்
படம் உடை அரவில் பள்ளி பயின்றவன் பாதம் காண
நடமினோ, நமர்கள் உள்ளீர் -நாம் உமக்கு அறியச்சொன்னோம்

( கருத்து): மன்மதனுக்கு தந்தையான கட்டழகன் கண்ணன் தேடி எடுத்த வாஸ ஸ்தலம், மிக்க அழகு கொண்ட திருவனந்தபுரம் எனச்சொல்லுவார்கள். நம்முடன் குடல் துவக்கம் உள்ளவர்களே! நீங்கள் அறியும் வண்ணம் நான் சொல்லுவது இது தான்: அண்ணல் அனந்தபுரத்தில் எழுந்து அருளி இருப்பது நம்மை அனுக்ரஹிப்பதற்கே! அவனை அடைவதற்கு விரோதிகளான கடும் வினைகளை எல்லாம் ஒரே நொடியில் போக்கும் பராக்ரமசாலி, அங்கு படமுடைய பாம்பணையின் மேல் சயனித்துள்ளான். அவனுடைய திருவடிகளை ஸேவித்துக்கொள்ள உடனே நடந்திடுங்கள். அவன் உங்கள் வினைகள் எல்லாம் தவறாது போக்குவான்! அந்த பாக்யத்தை நீங்கள் இழக்கலாகாது என்பதற்காக சொன்னேன்.

திருவத்யயன உத்சவ சமயம் இந்த பாசுரம் சேவிப்பதைக்கேட்ட ஸ்வாமி ஆளவந்தார், உடனே தனது சிஷ்யர்களுடன், திருவனந்தபுர எம்பெருமான் மங்களாஸாஸனத்திற்காக அங்கு நடந்து சென்றார் என்பர்.

பாசுரம் 9

நாம் உமக்கறியச்சொன்ன நாள்களும் நணிய ஆன;
சேமம் நன்குடைத்துக்கண்டீர், செறிபொழிலனந்தபுரம்
தூமம் நல்விரைமலர்கள்துவளற ஆய்ந்து கொண்டு
வாமனன் அடிக்கென்றேத்த மாய்ந்தறும் வினைகள்- தாமே



ஸ்ரீ அனந்தபத்மநாப ஸ்வாமி – (கோயிலாழ்வார் பெருமாள் – Canada )

( நன்றி: சௌ ஸ்வேதா சுந்தரம்)

( கருத்து): "நாளேலரியேன், வைத்தநாள் வரை, மரணமானால் என்றெல்லாம் முன் சொன்னேன்". அந்த காலம் நெருங்கி விட்டது. அதனால், விரைவாகவே அவனடிக்கு திரும்ப வேணும். செழித்த சோலைகள் கொண்ட திருவனந்தபுரம் அடைந்து, அண்ணல் திருவடிகளில் நல்ல தூபம், சாந்து, நல்ல மணமுள்ள புஷ்பங்கள் இவைகளை தூய முறையில் சேகரித்து, வாமனனாக ஒரு நாள் அவதரித்த அனந்தபத்மநாபனின் திருவடிகளில் சேருங்கள். அவ்வகையில், அவனை ஆராதிக்கும்போது , உங்களுடைய பாபங்கள் எல்லாம் தானாகவே தொலையும்.

பாசுரம் 10

மாய்ந்து அறும் வினைகள் -தாமே, மாதவா ! என்ன ; நாளும்

ஏய்ந்த பொன் மதில் அனந்தபுரநகர் எந்தைக்கு என்று

சாந்தோடு விளக்கம், தூபம், தாமரை மலர்கள் நல்ல

ஆய்ந்துகொண்டு, ஏத்த வல்லார் -அண்டம் இல் புகழினாரே

( கருத்து): "ச்ரிய: பதியே (திருமகள் கேள்வனே) என்று ஒரு தடவை கூறிய ஒருவனுடைய வினைகள் எல்லாம் அழிந்து போம். அதற்குபின், பொன் மதில்கள் சூழ்ந்த அனந்தபுரத்தின் ஆதிக்கென்று நல்லதோர் சாந்தும், விளக்கும், தூபமும், தாமரை மலர்களும் தேடி எடுத்துக்கொண்டு அவனை ஆராதிக்கும் பாக்யசாலிகள், எல்லை இல்லா புகழை அடைவர்.

பாசுரம் 11

அந்தமில் புகழ் அனந்தபுரநகராதி தன்னை

கொந்தலர் பொழில் குருகூர் மாறன் சொல்லாயிரத்துள்

ஐந்தினோடு ஐந்தும் வல்லார் அணைவர், போய் அமருலகில்

பைந்தொடிமடந்தையர்-தம் வேய்மருதோளிணையே

( கருத்து): இந்த பாசுரங்கள் எல்லையே இல்லாத கல்யாண குணங்களுடன் கூடிய திருவனந்தபுரத்து எம்பெருமானை போற்றுபவை. அவன் ஜகத் காரணன். அவன் ஸ்ரீவைகுந்தத்தை விட்டு, திருவனந்தபுரம் அடைந்து இங்கு நமக்காக கண் வளர்கிறான். அவன் உலகிற்கு முதல்வன். அவன் பரம புருஷன். கொத்து கொத்தாக புஷ்பங்கள் மலரும் சோலைகள் கொண்ட திருக்குருகூர் வாஸியான மாறன் சடகோபன் பாடிய ஆயிரம்திருவாய்மொழி பாசுரங்களுள், இந்த பத்து திருவனந்தபுர நாதனைப்பற்றியவை. இந்த பாசுரங்களை கற்று, அப்யாஸம் பண்ணுவோர், தமது வாழ்வின் முடிவில், ஸ்ரீ வைகுந்தம் அடைந்து, அங்கு தேவ மாதர்களால் வரவேற்கப்பட்டு, ப்ரம்மாலங்காரத்தை ஏற்பர். இவர்கள், திருவனந்தபுர எம்பெருமானுக்கு செய்த கைங்கர்ய பலனால் , ஸ்ரீ வைகுந்த வாசிகளுக்கு மிகவும் போக்யமாவர்.

இப்பத்தின், முதல் ஐந்து பரோபதேசம ; மிகுந்த ஐந்து, தம்மோடு தமரைக் கூவி அழைத்து வைத்து செய்த ஹிதோபதேசம்.

இப்படியாக அனந்தபுரத்து ஆதியை, நமது துன்பங்கள் துடைக்கும் நேசனை, "நெறிமையால் மலர்கள் தூவி பூசனை" செய்யுமாறு உபதேசித்த பரமாசார்யனின் அருள் மார்க்கத்தை நாமும் கடைபிடித்து உய்வோமாக! ஓம் ஸ்ரீஹரிலக்ஷ்மி ஸமேத ஸ்ரீ பத்மநாப ஸ்வாமினே நம: ஸ்ரீ அ(ஆ)னந்த பத்மனாபன், ஹரி லக்ஷ்மி திருவடிகளே சரணம் என்று வணங்கிக் கொண்டு, அடுத்த மலைநாட்டுத் திருப்பதிக்கு செல்வோம்.



திருவனந்தபுரம் திருக்கோவில் (நன்றி: www.anudinam.org )

श्री अनन्तपुर क्षेत्रे मत्स्य वराह पद्म पुष्करणी तटे हेमकूट विमानच्छायायां अनन्तशयनाय पूर्वाभिमुखाय श्रीमते श्रीहरिलक्ष्मी नायिका समेत श्री अनन्तपद्मनाभ परब्रह्मणे नमः

ஸ்ரீ அனந்தபுர க்ஷேத்ரே மத்ஸ்ய வராஹ பத்ம புஷ்கரணீ தடே ஹேமகூட விமானச்சாயாயாம் அனந்தசயனாய பூர்வாபிமுகாய ஸ்ரீமதே ஸ்ரீஹரிலக்ஷ்மீ நாயிகா ஸமேத ஸ்ரீ அனந்தபத்மநாப பரப்ரஹ்மணே நம:

SrI anantapura kshetre matsya varAha padma pushkaraNI taTe hemakUTa vimAnacChaayAyAm ananataSayanAya, pUrvAbhimukhAya SrImate SrIharilakshmI nAyikA sameta SrI anantapadmanAbha parabrahmaNe namaH

**********